# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019
## 43 - கிறிஸ்தவம்
## புதிய பாடத்திட்டம்
## புள்ளி வழங்கும் விதம்

**ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் புள்ளிப் பகிர்வின் சாரம்சம்**

01. கிறிஸ்தவம் I ஆம் வினாப்பத்திரம் (நேரம் மணி 2)
பல்தேர்வு வினாக்கள் 50
ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 50 புள்ளிகள் ஆகும்.

02.கிறிஸ்தவம் II ஆம் வினாப்பத்திரம் (நேரம் மணி 3)
இது பகுதி I பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது.

**I ஆம் பகுதி வினாக்கள் 03 ஆகும்**

- 02 வினாக்களுக்கு மட்டுமே விடை எதிர்பார்க்கப்படுகின்றது.
- 01 வினா 4 பிவுகளைக் கொண்டது.
- பிரிவு i புள்ளி 02
  ii புள்ளி 04
  iii புள்ளி 06
  iv புள்ளி 08 நான்கு பிரிவுகளுக்கும் மொத்தம் புள்ளிகள் 20

இரு வினாக்களுக்கு (2 × 20) புள்ளிகள் 40 ஆகும்.

**II ஆம் பகுதி வினாக்கள் 05 ஆகும்**

- 03 வினாக்களுக்கு மட்டுமே விடை எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஒவ்வொரு வினாவும் i, ii என இரு பகுதிகளைக் கொண்டது.
- பிரிவு i புள்ளி 10
  ii புள்ளி 10 என ஒரு வினாவிற்கு புள்ளிகள் 20 ஆகும்.
- மூன்று வினாக்களுக்கு (3 × 20) புள்ளிகள் 60 ஆகும்.

03.

| | |
|---|---|
| I ஆம் வினாப்பத்திரம் புள்ளிகள் | 50 |
| II ஆம் வினாப்பத்திரம் புள்ளிகள் | 100 ÷ 2 |
| I ஆம் II ஆம் வினாப்பத்திரம் | 50 + 50 |
| மொத்தப்புள்ளி | 100 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{4}{5}$

(ii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{3}{5}$

(iii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

AL/2019/43/T-I(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பாபிலோனியாவில் நாடு கடத்தப்பட்ட காலத்தில் யூத மக்கள் பழகிக்கொண்ட மொழி
(1) கிரேக்க மொழி (2) எபிரேய மொழி (3) அரமைக் மொழி
(4) இலத்தின் மொழி (5) மசரோட்டிக் மொழி

**2.** 'யோவானின் உடல்' எனப்படும் நூல்களுள் **அடங்காதது**
(1) எபிரேயர் திருமுகம் ஆகும். (2) 1 யோவான் ஆகும்.
(3) யோவான் நற்செய்தி ஆகும். (4) திருவெளிப்பாடு ஆகும்.
(5) 2 யோவான் ஆகும்.

**3.** 'தோரா' என்னும் எபிரேயச் சொல்லின் பொருள் யாது?
(1) மரபு (2) சட்டம் (3) பூமி
(4) ஆசிரியர் உரை (5) நூல்

**4.** பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஐந்நூலின் ஆசிரியத்துவம் யாருக்கு வழங்கப்பட்டிருந்தது?
(1) பேதுருவுக்காகும். (2) ஆபிரகாமுக்காகும். (3) ஈசாக்குக்காகும்.
(4) மோசேயிக்காகும். (5) யோசுவாவுக்காகும்.

**5.** திருவழிபாட்டுச் சடங்குகளுக்கும் குருத்துவ சம்பிரதாயங்களுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பது
(1) D மரபிலாகும். (2) E மரபிலாகும். (3) J மரபிலாகும்.
(4) P மரபிலாகும். (5) Y மரபிலாகும்.

**6.** இறைவன் ஆபேலின் காணிக்கையைத் தேர்ந்துகொண்டதனூடாக எடுத்துக்காட்டப்படுவது யாது?
(1) பொறாமை ஏற்பட்டு ஒரு கொலை இடம்பெற்றுள்ளமையாகும்.
(2) பாவிக்கு எப்போதும் மன்னிப்புக் கிடைக்கும் என்பதாகும்.
(3) இறைவன் சுயமாகத் தாம் விரும்பியவர்களைத் தேர்ந்துகொள்வார் என்பதாகும்.
(4) இறைவன் ஆபேல், காயின் ஆகிய இருவருக்கும் தண்டனை வழங்கினார் என்பதாகும்.
(5) இறைவனுக்குக் காணிக்கை மிகவும் அவசியம் என்பதாகும்.

**7.** இயேசுவின் முன் அடையாளம் ஆனவர் யார்?
(1) காயின் (2) ஈசாக் (3) இஸ்கார் (4) ரூபன் (5) சாவுல்

**8.** எகிப்தியர் முகங்கொடுத்த பெருந்துன்பங்கள் சில பின்வருமாறு :

A - கொசுக்களின் தொல்லை
B - கால்நடைகளின் சாவு
C - வெட்டுக்கிளிகளின் தொல்லை
D - கொப்புளங்கள் வெடித்தல்
E - காரிருள்
F - தலைமகன் சாவு

இவற்றுள் பார்வோனுடன் எவ்வித பேரம்பேசுதலும் இன்றி மோசேயும் ஆரோனும் ஒன்றாகச் சேர்ந்து ஏற்படுத்திய துன்பங்களைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, B, D (2) A, C, F (3) A, D, E (4) A, E, F (5) C, D, E

**9.** 'கோய் கடோஷ்' என்னும் எபிரேயச் சொல்லின் பொருள் யாது?
(1) குருத்துவ அரசு (2) விடுதலை இனம் (3) இறைவனின் தனிச்சொத்து
(4) விசேட கொடை (5) வேறுபடுத்தப்பட்ட இனம்

**10.** கோத்திரமாக வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் ஒழுக்கமுள்ள இனமாக மாறியது,
(1) பேறுகள் எட்டுக்கும் பிரமாணிக்கமாய் இருந்தமையினாலாகும்.
(2) சீனாய் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தமையினாலாகும்.
(3) பாகால் தெய்வங்களை வழிபட்டமையினாலாகும்.
(4) அரசியல் தாக்கங்களினாலாகும்.
(5) சமூகத் தாக்கங்களினாலாகும்.

**11.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - தியானத்தில் ஈடுபடல்
B - தூதுப்பணியில் குழுவாகச் செயற்படல்
C - தவறான தீர்ப்பளித்தல்
D - ஆட்சிப் பலத்தால் நிறைந்திருத்தல்
E - தமது தூதுப் பணிக்குச் சான்றாக அருங்குறிகள் புரிதல்
இவற்றுள் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் தூதுப்பணியில் காணப்பட்ட விசேட பண்புகள் யாவை?
(1) A, B, C ஆகியனவாகும். (2) A, B, E ஆகியனவாகும். (3) A, C, D ஆகியனவாகும்.
(4) A, D, E ஆகியனவாகும். (5) B, C, D ஆகியனவாகும்.

**12.** வெளிப்படையாகக் காணப்படாவிட்டாலும், சமூகத்திற்குள் மறைக்கப்பட்ட அநீதியைப் பற்றிப் பேசிய இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) எரோமியா (3) ஆமோஸ் (4) எசேக்கியேல் (5) மீக்கா

**13.** 'இறைவனின் அன்பின் இறைவாக்கினர்' எனப்படுபவர்,
(1) எசாயா ஆவார். (2) ஆமோஸ் ஆவார். (3) எசேக்கியேல் ஆவார்.
(4) ஒசேயா ஆவார். (5) எரேமியா ஆவார்.

**14.** நீதியான வாழ்க்கையை வாழ்வதற்காக மக்களை ஊக்குவிக்கும் படிப்பினைகளை உள்ளடக்கிய திருப்பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) புலம்பல் பாடல் (2) அரச பாடல் (3) நம்பிக்கையின் பாடல்
(4) ஞானப் பாடல் (5) புகழ்ச்சிப் பாடல்

**15.** ஆன்மீக ஞானத்திற்குச் சிறந்த உதாரணமாக அமையும் நூல்கள் எவை?
(1) யோபு, சபை உரையாளர்
(2) யோபு, திருப்பாடல்கள்
(3) இனிமைமிகு பாடல், சபை உரையாளர்
(4) யோபு, சாலமோனின் ஞானம்
(5) சபை உரையாளர், திருப்பாடல்கள்

**16.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - தலைமை குரு உட்பட அங்கத்தவர் எண்ணிக்கை எழுபத்தொன்றாகும்.
B - மோசேயின் சட்டத்தின்படி தீர்ப்பு இடம்பெற்றது.
C - சமயத் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன.
D - விசேட உடை அணிந்து வருதல் வேண்டும்.
இவற்றுள் 'செனத்திரின் சங்கத்துடன்' தொடர்புடைய விடயங்கள் யாவை?
(1) A யும் B யும் ஆகும். (2) A யும் C யும் ஆகும். (3) A யும் D யும் ஆகும்.
(4) B யும் C யும் ஆகும். (5) C யும் D யும் ஆகும்.

**17.** மெசியாவின் வருகை ஏதோவொரு நாளில் நிகழும்வரை எதிர்பார்த்திராமல், அந்த நாளைத் தோன்றச் செய்வதற்காகப் பல்வேறு கலகங்களை உருவாக்கிய குழுவினர்
(1) எல்சேனியர் ஆவர். (2) சதுசேயர் ஆவர். (3) செலஸ்தியர் ஆவர்.
(4) பரிசேயர் ஆவர். (5) மறைநூல் அறிஞர்கள் ஆவர்.

**18.** உரோமைப் போர்வீரர்கள் எருசலேமை அழிப்பதற்குச் சிறிது காலப்பகுதிக்கு முன்னர், உரோமையில் எழுதப்பட்டதாக நம்பப்படும் நூல் எது?
(1) தூய லூக்கா நற்செய்தியாகும். (2) தூய மத்தேயு நற்செய்தியாகும்.
(3) தூய யோவான் நற்செய்தியாகும். (4) தூய மாற்கு நற்செய்தியாகும்.
(5) திருத்தூதர் பணி நூலாகும்.

**19.** முதன் முறையாகக் 'கிறிஸ்தவர்கள்' என்ற பெயரில் சீடர்கள் அறிமுகப்படுத்தப்பட்டது,
(1) பம்பிலியாவிலுள்ள தெருபையிலாகும்.
(2) சிரியாவின் அந்நியோக்கியாவிலாகும்.
(3) இக்கோணியாவில் செபக்கூடத்திலாகும்.
(4) பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவிலாகும்.
(5) லிஸ்திராவில் மறைத்தூதுரைப் பயணத்திலாகும்.

**20.** தூய பவுல் திமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தின் கருப்பொருள்,
(1) கிறிஸ்துவிற்குப் பணிபுரிபவர்களுக்குத் துக்க துயரங்கள் ஏற்படும் என்பதாகும்.
(2) கிறிஸ்தவனாவதற்கு இனம் முக்கியமானதல்ல என்பதாகும்.
(3) கிறிஸ்துவே மேலானவராக இருக்கிறார் என்பதாகும்.
(4) இறைவனுடைய எல்லையற்ற இரக்கத்தினால் மீட்புக் கிட்டுகிறது என்பதாகும்.
(5) பொறுமையுடன் தூதுரைப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதாகும்.

**21.** திருக்கோவிலின் திரை இரண்டாகக் கிழிதலின் மூலம் அடையாளப்படுத்தப்படுவது,
(1) இயேசுவின் வேதனைகள் வெளிப்படுத்தப்பட்டது என்பதாகும்.
(2) இறைவனிடம் செல்லும் வழியை இயேசு திறந்து தந்தார் என்பதாகும்.
(3) இறைவனின் பிரசன்னம் சந்தேகத்திற்குரியது என்பதாகும்.
(4) உயிர்ப்பு இடம்பெறும் என்பது பற்றிய முன்னறிவித்தலாகும்.
(5) சூழல் மாற்றத்தின் மூலம் உயிர்ப்பின் செய்தி வெளிப்படுகிறது என்பதாகும்.

**22.** தூய பவுல் அன்பு என்பதற்குப் பயன்படுத்தும் 'அகபே' என்னும் சொல்லின் மூலம் கருதப்படுவது யாது?
(1) லௌகீக அல்லது மேலுலக ஆற்றல்களால் நிறைந்திருத்தல்
(2) உடலை எரிபலியாக ஒப்புக்கொடுத்தல்
(3) பிரதிபலனை எதிர்பாராது தீமை செய்வோருக்கு நன்மை செய்தலும் நன்மையையே பிரார்த்தித்தலும்
(4) நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புடனும் அனைத்தையும் தியாகம் செய்தல்
(5) நேரிய செயலையிட்டு மகிழ்வடைவதும் பிறரின் தவறுகளையிட்டு மகிழ்வுறாதிருத்தலும்

**23.** "இல்லற வாழ்வில் மனைவி கணவருக்குப் பணிந்திருப்பதோடு, கணவன் தனது மனைவி தொடர்பில் அன்புடன் செயற்பட வேண்டும்" என்று தூய பவுல் கூறுவது
(1) எபேசியர் சபைக்காகும். (2) கொரிந்தியர் சபைக்காகும். (3) பிலிப்பியர் சபைக்காகும்.
(4) கலாத்தியர் சபைக்காகும். (5) உரோமையர் சபைக்காகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**24.** பெற்றோருக்குச் சரியான முறையில் கொடுக்கவேண்டிய மதிப்பையும் கவனிப்பையும் அன்பையும் செலுத்துவதன் மூலம்,
(1) பிள்ளைகள் தம் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவது எடுத்துக்காட்டப்படுகிறது.
(2) தமதும் ஏனையோரதும் மீட்பிற்கு வழிவகுத்துக்கொள்வர்.
(3) கிறிஸ்துவின் மீட்புத்திட்டத்தில் பங்காளிகளாவர்.
(4) நீண்ட ஆயுளைப் பெறுவதாக பத்துக் கட்டளைகள் எடுத்துக்காட்டுகின்றன.
(5) அனைத்து முயற்சிகளிலும் வெற்றி அடைவதாக எடுத்துக்காட்டுகிறது.

**25.** பிலிப்பியர் 2 : 5 - 11 திருமுகத்தில் எடுத்துக்காட்டப்படும் கிறிஸ்துவின் வாழ்வில் மேலோங்கிக் காணப்படும் பண்புகளாவன,
(1) தூய்மையும் கீழ்ப்படிதலும் ஆகும்.
(2) பணிவும் அன்பும் ஆகும்.
(3) அன்பும் கீழ்ப்படிதலும் ஆகும்.
(4) ஏழ்மையும் கீழ்ப்படிதலும் ஆகும்.
(5) பணிவும் கீழ்ப்படிதலும் ஆகும்.

**26.** இயேசுவின் பிரதான படிப்பினையாகிய "தலைவன் பணியாளனாக வேண்டும்" என்பதை அவர் எச்சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்துகின்றார்?
(1) பூங்காவனத்தில் செபித்தபோதாகும்.
(2) திருமுழுக்கின்போதாகும்.
(3) தோற்றம் மாறியபோதாகும்.
(4) இறுதி இரா உணவின்போதாகும்.
(5) விண்ணேற்பின்போதாகும்.

**27.** 'உங்கள் பலி தூய பலியாக இருப்பதற்கு முதலில் நீங்கள் ஒப்புரவின் பின்னர் ஒன்றுகூடி அப்பத்தைப் பிட்டு நன்றி கூறுங்கள்" எனக் குறிப்பிடப்படுவது,
(1) திருத்தூதர் பணி நூலிலாகும்.
(2) 'டிடாக்கே' என்னும் நூலிலாகும்.
(3) 1 கொரிந்தியர் திருமுகத்திலாகும்.
(4) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலிலாகும்.
(5) திருச்சபை சட்டக்கோவையிலாகும்.

**28.** பேரரசன் தியோக்கிளிசின் கலாபனைக் காலத்தில் மறைசாட்சிகளானவர்கள் யாவர்?
(1) தூய செபஸ்தியார், தூய லவுரேஞ்சியார், தூய அக்னேஸ்
(2) தூய லவுரேஞ்சியார், தூய சிசிலியா, தூய பொலிக்கப்
(3) தூய அக்னேஸ், தூய செபஸ்தியார், தூய லூசியா
(4) தூய திருத்தந்தை பீலிக்ஸ், தூய ஜஸ்டின், தூய சிசிலியா
(5) தூய ஜஸ்டின், தூய அக்னேஸ், தூய லூசியா

**29.** தர்க்கவியலாளரிடையே மிகவும் திறமை வாய்ந்தவர் யார்?
(1) தூய பெரிய கிரகோரியார்
(2) தூய அம்புறோஸ்
(3) தூய அகுஸ்தினார்
(4) தூய பெரிய பசில்
(5) தூய ஜஸ்டின்

**30.** திருத்தந்தை எட்டாவது பொனிபஸினால் 'திருச்சபையின் மறை மாமேதைகள்' என அழைக்கப்பட்டவர்கள்,
(1) தூய ஜெரோம், தூய அகுஸ்தினார், தூய அம்புறோஸ், தூய கிரகோரியார் ஆகியோராவர்.
(2) தூய கிரகோரியார், தூய பெரிய பசில், தூய ஜெரோம், தூய அத்தனாசியார் ஆகியோராவர்.
(3) தூய ஜோண் கிறிசோஸ்தம், தூய கிரகோரியார், தூய ஜெரோம், தூய அகுஸ்தினார் ஆகியோராவர்.
(4) தூய பொலிக்கப், தூய இக்னேசியஸ், தூய கிரகோரியார், தூய ஜெரோம் ஆகியோராவர்.
(5) தூய அம்புறோஸ், தூய கிரகோரியார், தூய பொலிக்கப், தூய ஜெரோம் ஆகியோராவர்.

**31.** இயேசு இறைவனின் இன்னுமோர் படைப்பு என வெளிப்படுத்திய பேதகம்
(1) ஆரிய பேதகம் ஆகும்.
(2) நெஸ்டோரிய பேதகம் ஆகும்.
(3) இயுத்திக்கேய பேதகம் ஆகும்.
(4) மோனத்தேலா பேதகம் ஆகும்.
(5) பெலாஜிய பேதகம் ஆகும்.

**32.** கி. பி. 431 இல் எபேசு திருச்சங்கம் எக்காரணத்துக்காகக் கூட்டப்பட்டது?
(1) கடவுள் மறுப்புக் கொள்கைக்கு பதிலளிப்பதற்காகும்.
(2) நெஸ்டோரிய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காகும்.
(3) இயுத்திக்கேய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காகும்.
(4) ஆரிய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காகும்.
(5) மோனத்தேலா பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காகும்.

**33.** 'கத்தோலிக்க திருச்சபையின் மரபுரீதியான நம்பிக்கையின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
(1) தூய ஜெரோம்
(2) தூய ஜஸ்டின்
(3) அலெக்சாந்திரிய தூய அத்தனாசியார்
(4) அலெக்சாந்திரிய தூய சிறில்
(5) தேர்த்துல்லியன்

**34.** திருப்பலியில் சொல்லப்படும் விசுவாசப் பிரமாணத்தைத் திருச்சபையின் வேத சத்தியமாக ஏற்றுக்கொண்ட திருச்சங்கம் எது?
(1) எருசலேம் பொதுச்சங்கமாகும்.
(2) நிசேயா பொதுச்சங்கமாகும்.
(3) கல்சிடோன் பொதுச்சங்கமாகும்.
(4) எபேசு பொதுச்சங்கமாகும்.
(5) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கமாகும்.

**35.** 'அட்டில்லா' என்னும் ஹன்ஸ் கோத்திரத் தலைவனின் தாக்குதலிலிருந்து உரோமையைப் பாதுகாத்துக்கொள்ள முன்னின்று உழைத்தவர்,
(1) திருத்தந்தை பெரிய கிரகோரியார் ஆவார்.
(2) திருத்தந்தை I வது லியோ ஆவார்.
(3) திருத்தந்தை II வது சில்வெஸ்டர் ஆவார்.
(4) திருத்தந்தை XII வது அருளப்பர் ஆவார்.
(5) தூய பொனிபஸ் ஆவார்.

**36.** 'கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்' என்னும் நூலை வெளியிட்டவர்
(1) மாட்டின் லூத்தர் ஆவார்.
(2) ஜோன் வெஸ்லி ஆவார்.
(3) வில்லியம் பூத் ஆவார்.
(4) ஹுல்ரிச் சுவிங்லி ஆவார்.
(5) ஜோன் கல்வின் ஆவார்.

**37.** கி.பி. 1054 இல் கீழைத்தேய திருச்சபை கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து கிரேக்க ஓத்தடொக்ஸ் சபையை உருவாக்கக் காரணம் யாது?
(1) அருளடையாளங்களை மறுத்தல்
(2) திருவிவிலியத்தை மறுத்தல்
(3) திருப்பலியை மறுத்தல்
(4) ஒரே திருச்சபை என்னும் இறை சிந்தனையைப் புறக்கணித்தல்
(5) பூரண பலன்களைப் புறக்கணித்தல்

**38.** "இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச் செல்லும் விசுவாசமாகும்" எனக் குறிப்பிட்டவர்
(1) காண்டற்புரி புனித அன்சலம் ஆவார்.
(2) பீற்றர் லெம்பட் ஆவார்.
(3) தூய அகுஸ்தினார் ஆவார்.
(4) மாட்டின் லூத்தர் ஆவார்.
(5) ஜோன் கல்வின் ஆவார்.

**39.** கார்மேல் சபையின் துறவற வாழ்வை இங்கிலாந்திற்கு அறிமுகம் செய்தவர்
(1) தூய சைமன் ஸ்டொக் ஆவார்.
(2) தூய அவிலா திரேசாள் ஆவார்.
(3) தூய சிலுவை அருளப்பர் ஆவார்.
(4) அசீசியின் தூய பிரான்சிஸ் ஆவார்.
(5) தூய பீற்றர் கனிசியஸ் ஆவார்.

**40.** 10 ஆம் நூற்றாண்டில் திருச்சபையின் சுகபோக வாழ்வை விமர்சித்து திருச்சபைக்கு ஏழ்மையை அறிமுகப்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள்
(1) குளுனியர் ஆவர்.
(2) சிஸ்டன்சீயனியர் ஆவர்.
(3) பெனடிக்டனியர் ஆவர்.
(4) லூத்தரனியர் ஆவர்.
(5) வல்தென்சியனியர் ஆவர்.

**41.** தூய சிலுவை அருளப்பரால் எழுதப்பட்ட நூல் **அல்லாதது**
(1) கார்மேல் சபை ஏற்றம்
(2) இருண்ட இரவு
(3) நிறை வாழ்வின் வழி
(4) ஆன்மீகப் பாடல்
(5) அன்பின் அணையாச் சுவாலை

**42.** சீகிரியா காலத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த மிகார சேனாதிபதி ஒரு கிறிஸ்தவர் என்ற கருத்தை முன்வைத்தவர்,
(1) அபுசைதோ ஆவார். (2) ஏ. ஆர். அயர்டன் ஆவார்.
(3) செனரத் பரணவிதாரண ஆவார். (4) பெஞ்ஜமின் ரபாயின் ஆவார்.
(5) லெனாட் வுல்ப் ஆவார்.

**43.** 'பத்றோ ஆடோ' என்னும் திருச்சபையின் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயற்படுத்தியவரும் அதனுடன் தொடர்புடையவருமான திருத்தந்தை யார்?
(1) திருத்தந்தை V ஆவது பியுஸ் (2) திருத்தந்தை V ஆவது அலெக்சாண்டர்
(3) திருத்தந்தை VI ஆவது அலெக்சாண்டர் (4) திருத்தந்தை IX ஆவது பியுஸ்
(5) திருத்தந்தை XIII ஆவது லியோ

**44.** 1557 இல் தர்மபால மன்னன் கத்தோலிக்க மதத்தைத் தழுவி சூட்டிக்கொண்ட பெயர் என்ன?
(1) மாயாதுன்ன (2) டொன் யுவான் தர்மபால (3) யுவான் த விலா
(4) றைகம் பண்டார (5) அந்தோனியோ

**45.** போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க மறைத்தூதுவர்களிடம் காணப்பட்ட எப்பண்பின் காரணமாக மறைபோதகப் பணியினை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது?
(1) அறிவுபூர்வமான மொழியறிவு (2) எளிமையான வாழ்க்கை முறை
(3) மானிய முறை (4) சமூக வாழ்க்கை முறை
(5) நிதி வசதிகளை வழங்குதல்

**46.** திருவிவிலியத்தின் சிங்கள மொழி பெயர்ப்பும் மக்கள் மத்தியில் பரவச் செய்தலும் எந்த ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
(1) போர்த்துக்கேயர் (2) ஆங்கிலேயர் (3) சிங்கள
(4) தமிழ் (5) ஒல்லாந்தர்

**47.** இலங்கையில் முதல் கன்னியர் மடப் பாடசாலையை ஆரம்பித்த துறவற சபை எது?
(1) திருத்தூதர் கன்னியர் சபை (2) அப்போஸ்தலிக்க கார்மேல் சபை
(3) திருக்குடும்ப துறவற சபை (4) நல்லாயன் துறவற சபை
(5) மரியாயின் பிரான்சிஸ்கன் துறவற சபை

**48.** மானிட அபிவிருத்திக்காகப் 'பொது நன்மையை' ஏற்படுத்துவதன் தேவைப்பாடு இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் விளக்கப்படுகிறது. இங்கு 'பொது நன்மை' என்பது
(1) ஒவ்வொருவருடைய நலனுக்காகவும் பணியாற்றுதலாகும்.
(2) அபிவிருத்தியின் முக்கியத்துவத்துக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றுதலாகும்.
(3) மனிதன் இயற்கையாகவே சமூகமயமானவன் என்பதால் ஏனையோருடன் இணைந்து வேலை செய்தலாகும்.
(4) அனைத்து மக்கள் பிரிவினரினதும் தனிநபர்களினதும் முழுமைக்கு வழியமைத்தலாகும்.
(5) சகோதரர்களிடத்து அன்பு செலுத்துவதுடன் சமூகத்தில் ஒதுக்கப்பட்டோருடன் இணைந்து வேலை செய்தலாகும்.

**49.** "சமாதானம் என்பது மனித நடத்தையில் காணப்படும் அமைதி, நியாயத்தை நடைமுறைப்படுத்தல், இரக்கம் ஆகியவற்றின் விளைவாகும்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது
(1) இன்றைய உலகில் திருச்சபை என்னும் வெளியீட்டில் ஆகும்.
(2) அவனியில் அமைதி என்னும் சுற்றுமடலில் ஆகும்.
(3) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி என்னும் நூலில் ஆகும்.
(4) உழைக்கும் மனிதர்கள் என்னும் சுற்றுமடலில் ஆகும்.
(5) அன்னையும் ஆசிரியையும் என்னும் சுற்றுமடலில் ஆகும்.

**50.** இலங்கையில் தேசிய கிறிஸ்தவ சபைகளின் கீழ் தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள கிறிஸ்தவ சபைகளின் எண்ணிக்கை யாது?
(1) இரண்டு (2) மூன்று (3) ஐந்து (4) ஏழு (5) எட்டு

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம

| විෂය අංකය பாட இலக்கம் | 43 | විෂයය பாடம் | கிறிஸ்தவம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 | 31. | 1 | 41. | 3 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 3 | 32. | 2 | 42. | 3 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 1 | 33. | 3 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 4 | 34. | 2, 5 | 44. | 2 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 5 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 4 | 36. | 5 | 46. | 5 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 2 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 3 | 38. | 1 | 48. | 4 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 5 | 39. | 1 | 49. | 3 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 1 | 40. | 5 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

[ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) இறை ஏவுதலால் நூலாக்கப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் **இரண்டினை** (2 திமொ. 3:16 இல் குறிப்பிட்டுள்ளவாறு) எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) இயற்கை நியதிக்கு அப்பால் விசேட விதமாகவும் முதன்மையானதாகவும் இடம்பெற்ற இறைவெளிப்பாட்டின் **இரு** அம்சங்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) இறை ஏவுதலின் வகைகள் **மூன்றையும்** குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iv) தேர்ந்து கொண்ட மக்களுக்கு இறைவன் தம்மை வெளிப்படுத்தியதன் ஊடாக பெற்றுக்கொள்ளும் அனுபவத்தின் மூலம் நீர் சமூகத்திற்குச் செய்யும் பணிகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) இறைவனால் படைக்கப்பட்ட, மனிதனுடைய உணவுக்குப் பயன்படாத விசேட தன்மையுடைய **இரண்டு** மரங்களும் எவை? (02 புள்ளிகள்)

(ii) யாவே, குரு பாரம்பரியங்களின் எழுத்தாளர்கள் குறிப்பிடும், இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் **இரு** முக்கிய விடயங்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) மனிதன் பாவத்தில் விழுந்ததன் காரணமாக முறிவடைந்த உறவுகள் **மூன்றினை** எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) "இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையின் மூலம் பெற்ற அழைப்பு இன்றைய மனிதனுக்குத் திருமுழுக்கின் வழியாக உரிமையாகிறது." அந்த அழைப்பின் ஊடாக நீர் சமூகத்துக்குச் செய்யும் தூதுரைப் பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

**3.** (i) மறையைப் பரப்புவதற்காகப் போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் பின்பற்றிய மறைபரப்பு முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கல்விக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் **இரண்டு** எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கல்விப்பணிகள் வெற்றிகரமாய் அமைந்ததில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றினை** முன்வைக்குக. (06 புள்ளிகள்)

(iv) தூய யோசப் வாஸ் அடிகளாரின் மறைதூதுக் கொள்கையினூடாக இன்றைய சமூகத் தலைவர்கள் பெற்றுக்கொள்ளத்தக்க முன்மாதிரிகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) திருவிவிலியத்தின் ஆசிரியத்துவம் பற்றிய **ஐந்து** விடயங்களை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இளமைப் பருவத்தில் உமக்கு ஏற்படுகின்ற சவால்களுக்கு திருவிவிலியத்தின் மூலம் தீர்வு காணத்தக்க சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) பாலைநிலப் பயணத்தில் இஸ்ராயேல் மக்கள் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவராகிய நீர் அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) மலைப்பொழிவின் மூலம் முன்வைக்கப்படும் குறிக்கோள்கள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மறைத்தூதுப் பணிக்காக தம்மைத் தயார்செய்வோரில் இருக்க வேண்டிய பண்புகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) மிலான் சாசனத்தின் பின்னர் கிடைத்த சலுகைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) வேத கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிளிர்ந்த விசேட பண்புகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, இன்றைய சமூகத்தில் நீர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் விதத்தை மேற்கூறிய விசேட பண்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுசீரமைப்புப் பணியை முன்னெடுத்துச் செல்லத் தலைமை தாங்கிய குருத்துவ, துறவற சபைகள் **ஐந்தினைப்** பெயரிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) சீர்திருத்தச் சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் மூலம் (1545-1563) முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சிச் செயற்றிட்டங்கள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவை உமது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவம் II
# பகுதி I

01. (i) **இறை ஏவுதலால் நூலாக்கப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் இரண்டினை (2 திமொ 3:16 இல் குறிப்பிட்டுள்ளவாறு) எழுதுக.**

1. கற்பித்தல்
2. தீய எண்ணங்களை அகற்றுதல்.
3. சீராக்குதல்.
4. நேர்மையாக வாழ்வதற்கான பயிற்சி அறிவை வழங்குதல்.

( இவற்றுள் ஏதாவது இரண்டு விடயங்கள் எழுதியிருப்பின் ஒன்றுக்கு ஒன்று வீதம் 02 புள்ளிகள் வழங்குக.)

(ii) **இயற்கை நியதிக்கு அப்பால் விசேட விதமாகவும் முதன்மையாகவும் இடம்பெற்ற இறைவெளிப்பாட்டின் இரு அம்சங்களையும் எழுதுக.**

1. சுய வெளிப்பாடு
2. அவருடைய மீட்புத்திட்டம் பற்றிய வெளிப்பாடு

(இவற்றுள் ஒன்றிற்கு இரண்டு புள்ளிகள் வீதம் நான்கு புள்ளிகள் வழங்குக.)

(iii) **இறை ஏவுதலின் வகைகள் மூன்றையும் குறிப்பிடுக.**

1. ஆயத்த இறை ஏவுதல்
2. போதனைக்கான இறை ஏவுதல்.
3. எழுத்தாக்கத்துக்கான இறை ஏவுதல்.

(இவற்றுள் ஒன்றிற்கு 2 புள்ளிகள் வீதம் ஆறு புள்ளிகள் வழங்குக.)

(iv) **தேர்ந்து கொண்ட மக்களுக்கு இறைவன் தம்மை வெளிப்படுத்தியதன் ஊடாக பெற்றுக்கொள்ளும் அனுபவத்தின் மூலம் நீர் சமூகத்திற்குச் செய்யும் பணிகள் நான்கினை விளக்குக.**

இறைவன் தாம் தேர்ந்துகொண்ட மக்களை இஸ்ரயேல் என பெயரிட்டு அவர்களோடு ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டார். குல முதுவர்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோபுடன் பேசிய இறைவன் மோசே "இருக்கிறவர் நாமே என" தம்மை வெளிப்படுத்தினார். இவ்வாறு பல்வேறு வழிகளில் தம்மை வெளிப்படுத்திய இறைவன் அவர்கள் தவறு செய்யும் போதும் வழிதவறும் போதும் அவர்களைத் தமது பக்கம் திருப்பி நல்வழிப்படுத்தினார். தாம் தெரிந்து கொண்ட இனத்தோடு மிக நெருங்கிய உறவை ஏற்படுத்தி அவர்களை பராமரித்து அவர்களுக்கு உணவு, நீர் என்பவற்றை வழங்கி பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்புத் தூணாகவும் பாலை நிலத்தில் பயணம் செய்ய வழிகாட்டினார்.

இன்று மனிதர்களாகிய நாம் எமது உயிருள்ள இறைவனின் வெளிப்படுத்தல்களை அதை அறியாதவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம். எல்லா மனிதர்களையும் அன்பு செய்பவர்களாகவும் வழிதவறிச் செல்பவர்களை நல்வழிப்படுத்துபவர்களாகவும், பிறரன்புப் பணிகளில் ஈடுபடுபவர்களாகவும் அன்றாடம் அயலாரின் தேவைகள் மட்டில் விழிப்புணர்வு உள்ளவர்களாகவும் இறை நம்பிக்கையில் உறுதிப்படுத்துபவர்களாகவும் திகழ்தல் வேண்டும்.

( இதுபோன்ற கருத்துக்கள் நான்கு எழுதி விளக்கியிருப்பின் ஒன்றிற்கு 2 புள்ளிகள் வீதம் எட்டுப்புள்ளிகள் வழங்கவும்.)

02) (i) **இறைவனால் படைக்கப்பட்ட, மனிதனுடைய உணவுக்குப் பயன்படாத விசேட தன்மையுடைய இரண்டு மரங்களும் எவை?**

1. வாழ்வின் மரம் – வாழ்வு தரும் மரம் (சாகா வரம்)
2. நன்மை தீமையைப் பகுத்தறியும் மரம் (சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்)

(இவற்றுள் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள் வழங்குக.)

(ii) **யாவே, குரு பாரம்பரியங்களின் எழுத்தாளர்கள் குறிப்பிடும், இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் இரு முக்கிய விடயங்களையும் எழுதுக.**

1. எண்ணற்ற சந்ததி
2. எக்காலத்திற்கும் உரிமையாகும் நாடு

(இவற்றுள் ஒன்றிற்கு 2 புள்ளிகள் வீதம் நான்கு புள்ளிகள் வழங்குக.)

(iii) **மனித பாவத்தில் விழுந்ததன் காரணமாக முறிவடைந்த உறவுகள் மூன்றினை எழுதுக.**

1. கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு
2. மனிதனுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு
3. மனிதனுக்கும் பூமி என்னும் இயற்கைக்கும் இடையிலான உறவு

(இவற்றுள் ஒன்றுக்கு இரண்டு புள்ளி வீதம் 6 புள்ளிகள் வழங்கவும்.)

(iv) **இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையின் மூலம் பெற்ற அழைப்பு இன்றைய மனிதனுக்குத் திருமுழுக்கின் வழியாக உரிமையாகிறது அந்த அழைப்பின் ஊடாக நீர் சமூகத்துக்குச் செய்யும் தூதுரைப் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- திருமுழுக்கின் வழியாக ஆயன் (அரசன்) குரு, இறைவாக்கினர் என்னும் மூவித பொறுப்புக்கள் எமக்கு வழங்கப்படுகின்றன.
- இன, மத, குல பேதம் பாராது அனைவரையும் ஏற்றுக் கொள்ளல்.
- பாரபட்சம் எதுவுமின்றி அவர்கள் தேவைகளைக் கேட்டறிந்து உதவுதல்.
- ஆபத்து வேளைகளில் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்க ஏற்பாடு செய்தல்.
- பங்கில் மறைப்பாடசாலை, பக்திச் சபைகளில் இணைந்து எமது சிரமத்தைப் பாராது அவற்றின் வளர்ச்சிக்காக எம்மை அர்ப்பணித்து அதன் நலனுக்காக உழைத்தல்.
- பொதுநிலை அப்போஸ்தலிக்க பணிகளில் ஈடுபட்டு உழைத்தல்.
- எமது சமூகத்தில் வாழும் ஏழைகளுக்காக இறைவனின் பிரதிநிதியாக செயற்படுதல், அவர்களுக்காக செபித்தல், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுதல்.
- காலத்தின் அறிகுறிகளை விளங்கி அவற்றின் மூலம் தமக்கு அளிக்கப்படும் பொறுப்புக்களை உணர்ந்தவர்களாக செயற்படுதல்.
- இறைவனுக்கு எதிராகச் செயற்படுவோரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி நீதி, சமத்துவம், சகோதரத்துவம் வளர உழைத்தல்.
- எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுத்து மனந்தளராது விசுவாசத்துடன் வாழ்ந்து காட்டுதல்.
- இறைவனின் செயற்பாடுகளுக்குச் சான்று பகர்தல்.

(இவ்வாறான கருத்தக்கள் எழுதியிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 8 புள்ளிகள் வழங்குக.)

03)(i) **மறையைப் பரப்புவதற்காக போர்த்துக்கேய மறைப்பரப்பாளர்கள் பின்பற்றிய மறைபரப்பு முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- தேசிய மொழிகளைக் கற்றுப் பிரசாரங்களை மேற்கொண்டமை.
- சமய நூல்களைத் தேசிய மொழிகளில் தயாரித்தமை.
- சிறு பிள்ளைகளுக்கு மறையைக் கற்பிக்க ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- பல்வேறு இரக்கப்பணிகளில் ஈடுபட்டமை.
- நாடகம், சுற்றுப்பிரகாரம், சுருபங்களின் உபயோகம் போன்றன மூலம் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியமை.

(இவற்றுள் 2 விடயங்கள் எழுதியிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள் வழங்குக.)

(ii) **பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கல்விக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் இரண்டு எழுதுக.**

- கொழும்பு அக்கடமி மிகவும் உயர் மட்டத்தில் பேணப்பட்ட பாடசாலையாக மாற்றியமை.
- ஆசிரியர் பயிற்சிக்காக சாதாரண பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை.
- கல்வியைப் போதிப்பதற்காக மத்திய பாடசாலைகள் மூன்று ஆரம்பிக்கப்பட்டமை.
- கொழும்பிலும் கண்டியிலும் உயர் மகளிர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

( இவற்றுள் இரண்டு விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள் வழங்குக.)

(iii) **ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கல்விப்பணிகள் வெற்றிகரமாய் அமைந்ததில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினை முன்வைக்குக.**

- போர்த்துக்கேயரைவிட முறையான ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகளில் இருந்தமை.
- சகல பங்குகளிலும் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டமை.
- எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்கு அனுப்பப்பட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டது.
- பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பிள்ளைகளுக்கு தண்டம் விதிக்கப்பட்டது.
- மறையாசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.
- 15 வயதுவரை கட்டாயக்கல் வியாக்கப்பட்டதோடு கல்வி முடிவடைந்ததும் பாடசாலையிலேயே பரீட்சை நடாத்தப்பட்டு லாகிரிடம் என்னும் சான்றிதழ் வழங்கப்பட்டமை.
- பிள்ளைகளுக்குப் 19 வயதுவரை தொடர் ஒழுங்குமுறை தயாரிக்கப்பட்டது.
- மிகத் திறமையான பிள்ளைகளுக்கு உயர் கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்பட்டது.
- உயர் கல்விக்கு வெளிநாடு செல்வதற்கும் வழி வகுக்கப்பட்டது.
- கல்விக்கான நேரடிப்பொறுப்பு ஒல்லாந்து அரசு பொறுப்பேற்றது.
- “ஸ்கொலாகல் கொமிஷன்” என்னும் விசேட நிறுவனத்தின் வழியாக எல்லாச் செலவுகளையும் ஏற்று ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு பயிற்சி அளிப்பது.
- பாட சாலை பரீட்சைகளை நடாத்துதல்.

( மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதாவது மூன்று காரணிகள் எழுதப்பட்டிருப்பின் ஒன்றிற்கு இரண்டு புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள் வழங்கவும்.)

(iv) **தூய யோசப் வாஸ் அடிகளாரின் மறைதூதுக் கொள்கையினூடாக இன்றைய சமூகத் தலைவர்கள் பெற்றுக்கொள்ளத்தக்க முன்மாதிரிகள் நான்கினை விளக்குக.**

**புனித யோசப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கைகள்**

- இந்நாட்டுக்கு வருகை தந்ததும் பணியாற்றியதும் தனியே கிறிஸ்துவின் பிரதிநியியாக மட்டுமே ஆகும்.
- எந்தவொரு அரசியல் தொடர்போ அரச உதவியோ இல்லாமலும் மத பிரசாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்பதைத் தனது பணி மூலம் கத்தோலிக்க உலகுக்குக் காட்டியுள்ளமை.
- வேற்றுமைகள் பாராது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டமை.
- தேசிய மொழிகளை நன்கு கற்று அறியாது மறைதூதுப் பணியில் ஈடுபடல் மிகக் கடினமானது என ஏற்றுக்கொண்ட வாஸ் அடிகளார் சிங்களம் தமிழ் மொழிகளைப் பொது நன்மைக்காக நன்கு கற்றுக்கொண்டமை.
- இலங்கையில் கத்தோலிக்க மறைக்குத் தேசிய கலாசாரப் பண்புகளைத் தொடர்பு படுத்துவதற்கும் வாஸ் அடிகளார் முயற்சி செய்தார். அக்கால வழக்கத்திற்கேற்ப பொது வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்ற போதும் தேசிய மொழிகளில் செபிப்பதற்கு வழியமைத்துக் கொடுத்தமை.
- போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கர்களாக இருந்தவர்களுக்கு தொடர்ந்தும் நல்ல கத்தோலிக்கர்களாக வாழ உதவியமை.
- ஒல்லாந்தரின் வருகையால் புரட்ஸ்தாந்து மதத்தைத் தழுவிய கத்தோலிக்கர்களுக்கு உண்மையான திருச்சபை எதுவெனத் தெளிவுபடுத்தியதுடன் அவர்களை மீண்டும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொண்டமை.
- தமது நடமாடும் மறைதூதுப் பணியினால் மிகப்பெரும் பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் பணியாற்றியமை.
- குருக்கள் பற்றாக்குறையாக இருந்தமையால் சிறு குழுமங்களுக்குப் பொதுநிலையினரைத் தலைவர்களாக நியமித்தமை. உதாரணம் : அண்ணாவியார், சக்கிருஷ்டியான், மூப்பர்.
- செபித்தலைத் தமது வாழ்வின் ஆபரணமாகக் கொண்டு எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்தமை.

**மேற்படி புனிதரின் கொள்கைகள் வழியாக இன்றைய சமூகத் தலைவர்கள் பெற்றுக்கொள்ளத்தக்க முன்மாதிரிகளாவன.**

- எல்லா மதங்களையும் மொழிகளையும் மதித்து நடத்தல்.
- அர்ப்பணிப்போடு சவால்களை பின்பற்றுதல்.
- எளிமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல்.
- எதுவித தடையுமின்றி இறை அழைப்பை ஏற்றுச் செயற்படல்.
- தமது பணியைத் தொடர்ந்தாற்ற ஏனையோரைப் பயிற்றுவித்தல்.
- எவ்வேலைகளையும் செபத்துடன் ஆரம்பிப்பதோடு தமது வாழ்விற்கு செபத்தை ஆபரணமாகக் கொண்டு செயற்படல்.

( இவ்வாறான கருத்துக்கள் நான்கு எழுதியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதம் நான்கு புள்ளிகள் வழங்குக.)

# பகுதி II

**நோக்கம் :**

**திருவிவிலியத்தின் மேன்மையைச் சரியான முறையில் புரிந்துகொண்டு அன்றாட வாழ்வின் செயற்பாடுகளில் அதன் அறிவைப் பயன்படுத்துதல்.**

04.(i) **திருவிவிலியத்தின் ஆசிரியத்துவம் பற்றிய ஐந்து விடயங்களை விவரிக்குக.**

- திருச்சபைத் தந்தையர்களின் காலம் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- திருமறைநூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை எனவும், அதன் ஆசிரியர் இறைவனே என்பதுமாகும்.
- 1893 இல் திருத்தந்தை 13 ஆம் லியோ அவர்கள் வெளியிட்ட இறைபராமரிப்பு என்ற சுற்றுமடலின்படி
  திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் இறைவன்
  துணை ஆசிரியர் மனிதன்
- திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் இறைவனாக இருப்பதனால் அதிலிருப்பது இறைவனின் வெளிப்பாடாகும், இறை செய்தியும் ஆகும்.
- இச்செய்தி எக்காலத்துக்கும், எவ்விடத்திற்கும் உரியது அவ்வெளிப்பாடு நிலையானதும், நித்தியமானதுமாகும்.
- திருவிவிலியத்தின் துணை ஆசிரியரான மனிதன் ஆக்கபூர்வ செயற்பாடு கொண்டவனாதலால் திருவிவிலியத்துக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பக்கம் உண்டு. விவிலியத்தில் எழுதப்பட்டவற்றில் விஞ்ஞானம், வரலாறு பற்றிய விடயங்கள் இல்லாதிருப்பது, மனிதன் வரையறைக்குட்பட்டவனாக இருப்பதாலாகும்.
- மனிதன் தன் அறிவு, சுதந்திரம் என்பவற்றைப் பயன்படுத்தி, ஆக்கபூர்வமான ஒரு செயற்பாட்டில் ஈடுபடுவதோடு அதற்குத் தேவையான இறைசெய்தி இறைவனால் அருளப்படுகிறது. அச்செய்தி நிலையானதாக இருப்பினும் அதிலுள்ள கதைகள் முழுமையானவையும் அல்ல.
- இறைகரங்களில் மனிதன் துணைக்கருவி எனினும் மனிதனுக்கும் வேறு ஒரு கருவிக்குமிடையே வேறு-பாடு உண்டு.
  வேறு கருவிக்கு அறிவு சுதந்திரம் இல்லை. மனிதனுக்கு அவை உண்டு.
  இறைவன் உலகையும், மனிதனையும் படைத்த விதத்தை தேடியறிய மனிதனுக்கு அறிவு கொடுக்கப்பட்டுள்ளது.
  அச் செயற்பாட்டிற்கு முக்கியமாக அமைவது இறை செய்தியாகும்.

( இவற்றுள் ஏதாவது 5 கருத்துக்கள் எழுதியிருப்பின் ஒன்றுக்கு 2 வீதம் × 5 = 10 புள்ளிகள் வழங்கவும்.)

(II) **இளமைப் பருவத்தில் உமக்கு ஏற்படுகின்ற சவால்களுக்கு திருவிவிலியத்தின் மூலம் தீர்வு காணத்தக்க சந்தர்ப்பங்கள் ஐந்தினை விவரிக்குக.**

- தலைமைத்துவம் தாங்க சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது அவற்றை பொறுப்புணர்வோடு செயற்படுத்துவதற்கு விவிலியத்தில் காணப்படும் தலைவர்கள் விசேடமாக இயேசுவின் முன்மாதிரிகையைப் பின்பற்றுதல்.
- இவ்வுலக செல்வங்களில் பற்று ஏற்படும் போது திருவிவிலியத்தில் மத்தேயு நற்செய்தியில் இயேசு கூறும் விண்ணரசின் மதிப்பீடுகள் செல்வத்தைப் பற்றிய படிப்பினைகளில் கவனத்தைச் செலுத்துதல்.
- சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளைத் தட்டிக் கழித்துத் தீய நண்பர்களின் சகவாசத்தினால் கவரப்படும் போது சபை உரையாளர் – சீராக்கின் ஞானம் – நீதி மொழிகள் – திருப்பாடல்கள் – போன்ற திருவிவிலிய நூல்களை வாசித்து தியானித்தல்.
- இளைமைப்பருவ ஆசைகளுக்கும் உணவு, உடை போன்றவற்றுக்கும் அடிமையாகி செயற்பட தூ ண்டப்படும் போது இயேசு பாலை நிலத்தில் சோதனைகளை மேற்கொண்ட சந்தர்ப்பங்களைப் பற்றி தியானித்தல்.
- வாழ்வில் கஸ்டங்கள் துன்பங்கள் ஏற்படும் போது இயேசுவின் பாடுகள் மரணத்தின் மீது கவனத்தை திருப்புதல்.
- செபிக்க, திருப்பலியில் பங்குபற்ற மனம் அற்ற போது பத்துக்கட்டளைகள், செபம் பற்றிய இயேசுவின் படிப்பினைகள், இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் என்பவற்றை முன்மாதிரியாகக் கொள்ளுதல்.

( இத்தகைய விளக்கத்துடன் 5 விடயங்கள் எழுதியிருப்பின் 1 இற்கு 2 வீதம் × 5 = 10 புள்ளிகள் வழங்கவும்.)

**நோக்கம் :**

**இஸ்ரயேல் விடுதலைப் பயணத்தின் போது பெற்ற இறை அனுபவத்தைக் கிறிஸ்தவர்கள் தம் வாழ்வில் அனுபவித்தறிய முற்படல்.**

05.(i) **பாலைநிலப் பயணத்தில் இஸ்ரயேல் மக்கள் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை விவரிக்குக.**

- செங்கடலைக் கடந்து எதிரியின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்ட போது இறைவன் தமது பக்கமாய் இருந்தார் என உணர்ந்தனர்.
- பாலை நிலத்தில் வழிப்பயணத்தின் போது, பகலில் மேகத்தூண் வடிவிலும் இரவில் நெருப்புத்தூண் வடிவிலும் இறைவன் அவர்கள் முன் சென்றார் என்பதை அனுபவித்தனர்.
- மாரா என்னுமிடத்தில் தாகம் ஏற்பட்ட போது அருந்துவதற்கு முடியாத உவர் நீரை மோசே வழியாக சுவையுள்ள நீராக மாற்றி அவர்களுக்கு அருந்துவதற்குக் கொடுத்தார்.
- சீனாய் பாலைநிலத்தில் உண்ண உணவின்றி இருந்தபோது மன்னா என்னும் உணவினால் அவர்களைப் போஷித்தார்.
- பாலைநிலத்தில் விஷப் பாம்பினால் தீண்டப்பட்டபோது வெண்கலப் பாம்பின் சின்னத்தின் மூலம் குணமளித்துப் பாதுகாத்தார்.
- வேற்றினத்தாரின் ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாத்தார்.

(மேற்குறிப்பிட்ட விடயங்களை விபரித்து எழுதியிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 5 விடயங்களுக்கு 10 புள்ளிகள் வழங்குக.)

(ii) **கிறிஸ்தவர்களாகிய நீர் அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

- பல்வேறு துன்பதுயரமான நிகழ்வுகளான நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி போன்ற அனர்த்தங்கள் மத்தியிலும் இறைவன் எம்மைக் காப்பாற்றுகின்றார்.

- இரவு பகல் வேளைகளில் எம் கடமைகளைச் செயற்படுத்தும் போது இறைவன் எம்மை வழிநடத்திச் செல்கின்றார்.

- அருட்பணியாளர்களின் மறையுரைகள், இல்லத்தரிசிப்புக்கள் மூலம் தீய நாட்டங்களில் ஈடுபடும் மனிதர்கள் தம் குடிவெறி, களியாட்டம், பரத்தமை, கொலை, களவு போன்ற செயல்களிலிருந்து விடுதலை பெற்று இறை பிரசன்னத்தை அருகின்றார்.

- இன்று அகதிகளாக, அநாதைகளாக கைவிடப்பட்டோராக இருப்பவர்களுக்கு செல்வந்த நாடுகள், குடும்பங்கள், நிறுவனங்களினூடாக அவர்களது அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதன் மூலம் இறைவன் பராமரிக்கின்றார்.

- இன்று நோயின் பிடியிலும் மரண தறுவாயில் உள்ளவர்கள் இறைவனை நோக்கி விசுவாசத்துடன் உற்றுப் பார்த்து தம் மன்றாட்டுக்களை கேட்கும் போது அவர்கள் வேண்டுதல்களுக்குச் செவிசாய்கின்றார்.

- எதிரிகளின் தொல்லைகள், பிரச்சினைகளில் மத்தியில் இறைவன் எம்மோடிருந்து எம்மைக் காத்து வழிநடத்திப் பாதுகாக்கிறார்.

(இவ்வாறான ஐந்து கருத்துக்கள் விளக்கியிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்)

**நோக்கம் :**

**கிறிஸ்தவ படிப்பினைகளின் மூலம் நிறைவு பெற்று இறையரசின் பங்காளர் ஆவதற்கு முயற்சிப்பார்.**

06. (i) **மலைப்பொழிவின் மூலம் முன்வைக்கப்படும் குறிக்கோள்கள் ஐந்தினை விபரிக்க.**

- திருத்தூதரின் அறநெறிகள், மறைநூல், அறிஞர் மற்றும் பரிசேயரின் அறநெறிகளை விட மேலானது.
- இயேசு புதிய மோசேயாக மலையின் மேல் புதிய சட்டத்தைக் கொடுத்துள்ளார்.
- பழைய சட்டங்கள் அனைத்தும் இயேசுவின் புதிய சட்டத்தில் நிறைவு பெற்றன.
- இறை ஆட்சிக்குள் நுழைய விரும்புவோர், உலகின் உப்பாகவும், ஒளியாகவும் செயற்பட வேண்டும்.
- மனித உள்ளங்களில் உள்ள தீய குணங்கள் அகற்றப்பட்டு தூய்மையோடு வாழ வேண்டும்.

(இந்த ஐந்து கருத்துக்கள் எழுதியிருப்பின் 5 × 2 = 10 புள்ளிகள் வழங்குக.)

(II) **மறைத்தூதுப் பணிக்காக தம்மைத் தயார் செய்வோரில் இருக்க வேண்டிய பண்புகள் ஐந்தினை விபரிக்குக.**

- நற்செய்தி அறிவிக்க, நோய்களைக் குணமாக்க, இறந்தவர்களை உயிர்ப்பிக்க, அலகையை அடக்க, இயேசு திருத்தூதர்களை அனுப்பினார்.
- இறைவனில் நம்பிக்கை வைத்து மேலதிகமாகப் பொருட்களைக் கொண்டு செல்லாது வெறுமையாகப் பயணம் செய்ய வேண்டும். ஏனெனில் திருத்தூதர் இறைபராமரிப்பில் தங்கி வாழ வேண்டும்.
- மறைதூதுப் பணிக்கு இருவரிருவராகச் செல்ல வேண்டியது சாட்சி பகர்பவர்களாக இருப்பதற்காகவேயாகும்.
- வாழ்வானது எதிலும் பற்று அற்றதாகவும் எளிமையானதாகவும் இருத்தல் அவசியமானதாகும்.
- அமைதியின் தூதுவரான திருத்தூதர் மக்கள் மத்தியில் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றச் செல்ல வேண்டும். அதாவது ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதைப் போன்றதாகும்.
- மறைத்தூதுப் பணிக்காக அவர்களது செயற்பாடுகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால் சம்பிரதாய வணக்கங்கள் செய்வதற்காக நேரத்தை செலவழித்தல் பொருத்தமற்றதாகும். உரிய கொடுப்பனவும் கிடைக்கும். பணிபுரிபவனுக்கு அதற்கான சம்பளம் கிடைக்கப்பட வேண்டும். (இ. ச 25 : 4)
- அமைதி வாழ்த்துக் கூறுவது யூதர்களின் பாரம்பரிய வணக்க முறையாகும். அமைதி நல்வாழ்த்துக் கூறியவுடனேயே அமைதி மற்றும் நல்ல நிலையை அடைதல் அதனைக் கொடுத்துப் பெறுவதை அடைந்து கொள்வதென்பது அக்காலத்து யூத நம்பிக்கை.
- கால்களில் உள்ள தூசியைத் தட்டுதல் இறைவனின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைப்பதன் அடையாளமாக இருக்கின்றது.
- நற்செய்தி அறிவிப்போனை ஏற்றுக் கொள்ளாதவர்களிடமிருந்து விட்டு விலகிச் செல்ல வேண்டும்.
- நற்செய்தி அறிவித்தலை ஏற்றுக்கொள்ளாதவரின் நிலை அதனையும் விட கொடியதாக இருக்கலாம்.

(இவற்றுள் ஏதாவது விடயங்கள் 5 எழுதி விளக்கியிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்)

**நோக்கம்:**

**வாழ்க்கைச் சவால்கள் முன்னிலையில் தூய ஆவியின் வல்லமையால் நிரம்பி நம்பிக்கைக்குச் சான்று பகர்ந்த விதம் பற்றி மாணவர் மனநிலையைப் பரீட்சித்தல்.**

07. (i) **மிலான் சாசனத்தின் பின்னர் கிடைத்த சலுகைகள் ஐந்தினை விளக்குக.**

- கிறிஸ்தவர்களின் சபாத் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- எந்த விதமான குற்றங்களுக்கும் உள்ளானபோதும் சிலுவையில் அறையும் தண்டனை இரத்துச் செய்யப்பட்டது.
- உரோமைய நம்பிக்கைகளில் இருந்த ஊழல்கள், சடங்கு முறைகள் தடை செய்யப்பட்டன.
- கிறிஸ்தவ குருக்கள் வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
- பேரரசில் நிர்வாகப் பதவிகள் வகிப்பதற்கு கிறிஸ்தவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- சிலுவையின் அடையாளம் பேரரசின் உத்தியோக சின்னமாக்கப்பட்டது.
- திருதந்தைக்கு இலத்திரன் மாளிகை மீண்டும் கொடுக்கப்பட்டது.
- முதல் சில நூற்றாண்டுகளில் கலாபனைகளின் சவால்களுக்கு முகங்கொடுத்த திருச்சபை நம்பிக்கையால் சக்தி பெற்று கலாபனைக்கு மத்தியிலேயும் நம்பிக்கைக்குச் சான்று பகர்ந்தது.

- தற்போதைய கிறிஸ்தவர்களாக வாழ்க்கைச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது இறைவனில் உள்ள நம்பிக்கையைச் சக்தி பெறச் செய்வதற்கு ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பெரியதோர் முன்மாதிரியைக் காட்டியுள்ளனர்.

(இவை போன்ற பொருத்தமான விடயங்கள் 5 எழுதியிருப்பின் $5x2 = 10$ புள்ளிகள் வழங்கவும்)

(II) **வேத கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிளிர்ந்த விசேட பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, இன்றைய சமூகத்தில் நீர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் விதத்தை மேற்கூறிய விசேட பண்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

பண்புகள் ஐந்து

- துன்பங்களுக்கு அஞ்சாது முகங்கொடுத்தல்.
- நிலையற்ற செல்வங்களில் பற்று வைக்காது, இறைவனில் நிலைத்திருத்தல்.
- கஸ்டங்கள், வேதனைகள் வரும்போது முதலாம் கட்டளைக்கு எதிரான செயல்களை மேற் கொள்ளாதிருத்தல்.
- தங்கள் உயிரிலும் மேலாக (இறைவார்த்தையை) வேதாகமத்துக்கு முதலிடம் கொடுத்தல்.
- நிலையற்ற இவ்வுலகை விட, நிலையான விண்ணுலகைப் பற்றிய விசுவாசத்தில் நிலைத்திருத்தல்.
- உண்மை, நேர்மை போன்ற பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்.

சவால்களுக்கு முகம் கொடுத்தல்

- ஏனைய சமயப் பிரிவினரின் எதிர்ப்புக்களால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மத்தியிலும் தைரியமாக இருத்தல்.
- சினிமா, மொபைல் கையடக்கத் தொலைபேசியில் வீணாக நேரத்தைச் செலவிடாமல், இறைவனில் என்றும் நிலைத்திருத்தல்.
- இறைவனை மறுதலிக்கக் கூடிய சந்தர்ப்பங்களான சோதிடம் பார்த்தல், பில்லி சூனிய செயல்களில் ஈடுபடல், செல்வத்தில் அதிக பற்று வைத்தல் போன்றவற்றை விலக்குதல்.
- வேதத்தை மறுதலிக்கும் சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களை சந்திக்க துணிந்தாலும், வேதாகமத்தை பாதுகாக்க வேண்டும்.
- இறைவனின் வருகைக்கு எம்மைத் தயார் செய்தல் வேண்டும். அதற்காக விண்ணக பேரின்பத்தை சுவைக்க இவ்வுலகில் எம்மை தயார் செய்ய வேண்டும்.
- உயிரை இழக்க நேரிடினும் இறையாட்சியின் மதிப்பீடுகளை எம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

( பண்புகளுக்கு 5 புள்ளிகளும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் விதத்துக்கு 5 புள்ளிகளுமாக 5 + 5 = 10 புள்ளிகள்)

**நோக்கம்:**

**ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக் கல்வி வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்தவர்களை அறிந்து, அவர்கள் சேவையைப் பாராட்டுவதோடு திருச்சபையின் தூதுப் பணிக்கு தம் ஒத்துழைப்பையும் வழங்க முன்வருவர்.**

08.(i) **பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுசீரமைப்புப் பணியை முன்னெடுத்துச் செல்லத் தலைமை தாங்கிய குருத்துவ, துறவற சபைகள் ஐந்தினைப் பெயரிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- 16 ஆம் நூற்றாண்டுகளில் சீர்திருத்தச் சபைகளின் புரட்சியின் பலனாகத் கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தத்தை வலியுறுத்தி பல புதிய துறவற சபைகள் நிறுவப்பட்டன. அதே சமயம் ஏற்கனவே இருந்த துறவற சபைகளும் மறுசீரமைக்கப்பட்டன. திருச்சபையின் மறுசீரமைப்புச் செயலை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்குத் தூய்மையான செயலூக்கமுள்ள குருக்களின் தலைமைத்துவம் தேவைப்பட்டது. திருச்சபையின் சீர்த்திருத்தத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட துறவற சபைகளில் கார்மேல் சபை, கப்புச்சின் சபை, வின்சென்சியன் சபை, இயேசு சபை அன்பு கன்னியர் சபை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**கார்மேல் சபை**

- 12 ஆம் நூற்றாண்டில் பலஸ்தீனத்திலுள்ள கார்மேல் மலையில் ஆரம்பமானது.
- இச்சபையின் துறவிகள் கார்மேல் மலையில் தனிவாசமும் கடுமையான தப வாழ்வும் வாழ்ந்தவர்கள்.
- புனித சைமன் ஸ்டொக் இத் துறவற வாழ்வின் மரபுகளை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார்.
- பல்கலைக்கழகங்களுக்கு அண்மையிலுள்ள நகரங்களில் கார்மேல் சபையின் மடங்கள் நிறுவப்பட்டதன் காரணம் அவர்கள் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றினர், மறைப்பணிகளில் ஈடுபட்டனர்.
- கார்மேல் சபைத் துறவியான புனித அவிலா திரேசா தனது துறவற சபையில் மறுமலர்ச்சியை உருவாக்க முயற்சி செய்தார்.
- கார்மேல் சபையின் ஆரம்பகால தப வாழ்வு, ஆழ் தியான நிலை வாழ்வையும் கொண்டு வருவதற்கு புனித அவிலா திரேசா எடுத்த முயற்சிகள் பலனளித்தன. இவருக்கு உறுதுணையாகப் புனித சிலுவை அருளப்பர் இருந்தார்.
- நிறை வாழ்வின் வழி, உள்ளக மாளிகை எனும் ஆன்மீக நூல்கள் புனித அவிலா திரேசாவினால் எழுதப்பட்ட சிறந்த ஆன்மீக நூல்களாகும்.
- புனிதா அவிலா திரேசாவின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் புனித சிலுவை அருளப்பர் சீர்த்திருத்தத்திற்குத் துணையாய் இருந்தார். இவர் ஆன்மீக வாழ்வு பற்றிய பல நூல்களை எழுதியுள்ளார்.
- கார்மேல் சபை ஏற்றம்
- இருண்ட இரவு
- ஆன்மீகப் பாடல்
- அன்பின் அணையாச் சுவாலை
- இவர்கள் இருவர் எழுதிய ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்விற்கு மிகவும் உதவியாக இருந்தன.
- ஆன்மீக வாழ்வு ஆழ் தியான நிலைச் செபமும் இவர்களது ஆன்மீக ஆக்கங்கள் மிகவும் முக்கியமானவையாகும். ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பைப் அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாததாகும் என்னும் அறிவுரையின் படி குழந்தை இயேசுவின் புனித திரேசா வாழ்வினால் சான்று பகர்ந்துள்ளார்.

**கப்புச்சின் சபை**

- 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவற சபைகளில் கப்புச்சின் சபை முக்கியமானது. 13 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த பிரான்ஸிகன் துறவற சபைகளிலிருந்து 1525 இல் இச்சபை தோன்றியது.
- அசீசியின் புனித பிரான்ஸிசின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாக கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தொடக்க நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தும் நோக்குடனும் கப்புச்சின் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இவர்களுக்கு தலைமை தாங்கிய பிரான்சிஸ்கன் சபையின் மத்தேயு டீ பஸ்ஸி என்பவரின் துணையுடன் தோன்றியதாகும்.
- ஆரம்பத்தில் சபைக்கு, திருச்சபைக்கு உள்ளேயிருந்தே தடைகள் வந்தாலும் இப்புதிய சபை தமது வளர்ச்சியை மெதுவாக முன்னெடுத்தது. அவர்கள் தங்கள் போதிக்கும் பணியையும் மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரை பராமரிப்பதனாலும் கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர். புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தவாதிகளுக்கு எதிராகப் போதித்தனர். எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.

**வின்சென்சியன் சபை**

- புனித வின்சென்ட் டி போல் சபையின் சீர்த்திருத்தத்திற்கு முன்னின்று செயலாற்றியவர்.
- இவர் ஏழைகள் மட்டில் ஆழ்ந்த அன்பும் இரக்கமும் கொண்டவர்.
- கி.பி 1625 இல் வின்சென்ட் டி போல் மறைமாவட்டக்குருக்களின் குழுவை பிரான்சில் ஆரம்பித்தார். மறைமாவட்டக் குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.
- கத்தோலிக்கத் திருமறையைப் போதிக்கவும், சீர்த்திருத்தவாதிகளின் படிப்பினைகளுக்கு பதிலளிப்பதும் இவர்களின் பணியாகும். திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வின்சென்சியன் சபை இரண்டு முறைகளைப் பின்பற்றியது.
  1. துறவற சகைபளை நிறுவி முன்மாதிரிகையான குருக்களை உருவாக்குதல்.
  2. திரிதெந்தின் பொதுச் சங்கப் பரிந்துரைகளுக்கு ஏற்றவாறு குருக்களை உருவாக்கும் பொறுப்பை துறவற சபையிடம் ஒப்படைத்தல்.
- புனித வின்சென்ட் டி போல் 1633 இல் அன்புக்கன்னியர் சபையையும் ஆரம்பித்தார்.
- இது பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் சபையாகும்.

**இயேசு சபை**

- திருச்சபையின் மறுசீரமைப்புப் பின்னணியில் உருவாகியது.
- புனித லொயோலா இக்னேசியஸ்சினால் கி.பி 1533 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- அவர் போரில் காயமுற்று படுக்கையில் இருந்த போது வாசித்த கிறிஸ்துவின் வாழ்க்கை, புனிதர்களின் வாழ்க்கை என்னும் நூல்கள் அவரின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுகளாக அமைந்தன.
- பாமர மக்களுக்கும் ஏழைகளுக்கும் என ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணி பின்னர் இளவரசர்களுக்கும் அரசர்களுக்கும் வழங்கப்பட்டது.
- துறவற வார்த்தைப்பாடுகளை ஏற்றுத் தம்மை அர்ப்பணித்து திருத்தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிந்ததாக வாக்குறுதி எடுப்பது இச்சபையின் சிறப்பு அம்சமாகும்.
- கத்தோலிக்க திருச்சபையின் மறையுண்மையைக் கற்பித்து பாதுகாப்பது இவர்களது பணியாக இருந்தது.
- சீர்திருத்தச் சபைகள் வளர்ச்சியடைந்த காலத்தில் கத்தோலிக்கச் திருச்சபையின் மறுமலர்ச்சி இயேசு சபை குருக்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

- ஆன்மீகத்திலும் இறையியலிலும் பூரணத்துவம் பெற்றவர்களுள் புனித லோயாலோ இக்னேசியசினால் எழுதப்பட்ட ஆன்மீக பயிற்சிகள் எனும் நூலும் புனித பீட்டர் கனீசியஸினால் எழுதப்பட்ட மறைக்கல்வி நூல்கள் மூன்றும் கத்தோலிக்க மறைக்கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவியதோடு சீர்த்திருந்த சபையி–னால் புகழப்பட்டதோடு திரிதெந்தின் பொதுச்சங்கத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இயேசு சபையின் குருவான புனித றொபார்ட் பெலார்மின் போன்றோர் திரித்தெந்தின் பொதுச்சங்கத்தில் இறையியலாளராகச் செயற்பட்டனர்.

( ஐந்து துறவற சபைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஐந்து புள்ளிகளும் சுருக்கமாக விளக்கியிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஐந்து புள்ளிகளும் வழங்கவும்)

(ii) **சீர்த்திருத்தச் சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் மூலம் (1545 - 1563) முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சி செயற்றிட்டங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவை உமது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக.**

**திரிதெந்தின் பொதுச்சங்கம் முன்வைத்த மறுமலர்ச்சித் திட்டங்கள்**

- பரிபூரண பலன் பற்றிய போதனை முறையை நீக்குதல்.
- மரியன்னை, புனிதர்களுக்கு தகுந்த முறையில் வணக்கம் செலுத்த ஊக்குவித்தல்.
- குருத்துவப் பயிற்சிக்காக ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் குரு மடங்களை நிறுவுதல்.
- நற்கருணைப் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- நற்கருணை ஆராதனையையும் நற்கருணை ஆசிரையும் பெறுவதற்கு ஊக்குவித்தல்.

**ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் விதம்**

- இறைவனின் தயாகிய அன்னை மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி எவ்வேளையிலும் இறைவனை போற்றி புகழ்ந்து ஆராதித்து வாழப் பயிற்றுவித்தல். தினமும் செபமாலை தியானங்கள் வழியாக மரியன்னைக்கு வணக்கம் செலுத்துதல்.
- புனிதர்களின் வாழ்க்கை முன்மாதிரிகளை அறிந்து வாழப் பழகிக் கொள்வதோடு புனிதமான வாழ்க்கை வாழ்வதுடன் புனிதத் தன்மைக்கு வணக்கம் செலுத்துதல்.
- இன்றைய இளைஞர்களை குருத்துவ வாழ்விற்கு ஊக்குவிப்பதோடு அவர்கள் வளர்ச்சிக்கு உதவுதல்.
- தினமும் திருப்பலியில் பங்குபற்றி நற்கருணை உட்கொண்டு ஆன்மாவை திடப்படுத்துதல், தூய வாழ்க்கை வாழ்தல்.
- ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்தல்.
- நற்கருணை ஆசீர், பவனி என்பவற்றில் உண்மையான பக்தி நம்பிக்கையுடன் பங்குபற்றுவதோடு பி–றரையும் ஊக்குவித்தல்.

( இது போன்ற கருத்துக்கள் ( மறுமலர்ச்சித் திட்டங்கள்) பற்றி 5 எழுதியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீ–தமும் ஆன்மீகவழி விளக்கியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதமும் ஐந்து புள்ளிகளும் கருத்துக்களுக்கு 5 புள்ளிகளும் வழங்கப்படும்.)

(5 + 5 = 10 புள்ளிகள்)